Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடிஅரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 19 } ஈரோடு 20-10-1945 ஐப்பசிமீ 4உ } மலர் 2

## சுயமரியாதைக்காரன் ஏகாதிபத்தியங்கள் அனைத்திற்கும் எதிரி!

### தோழர் கனகம்மையார் இராமசாமி முழக்கம்

[30-9-45 திருச்சியில் நடைபெற்ற 4வது சுயமரியாதை மாகாண மாநாட்டில் கொடியேற்றிவைத்த தோழர் கனகம்மையார் இராமசாமி அவர்களின் சொற்பொழிவு]

திராவிட நாட்டுத் தலைவர் அவர்களே,
தாய்மார்களே, தோழர்களே!

தமிழ்நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இந்த மாபெருங் கூட்டத்தில் கொடியேற்றும் பெருமையினை எனக்களித்த கமிட்டியாருக்கு எனது நன்றியோடுகூடிய வணக்கம். அறிவும் ஆற்றலும், தகுதியும் வாய்ந்த பெரியோர் பலரிருக்க அவையேதும் இல்லாத என்னை நீங்கள் தேர்ந்தெடுத்தது எதைக் கருதியோ? நான் அறியேன். கொடிபோல மென்மை வாய்ந்தமையாலும். கொடிபோலவே வேறு பற்றுக்கோடின்றி வாழ முடியாமையாலும் பெண்களுக்குக் கொடியார் என்ற காரணப் பெயர் ஒன்று உண்டு. ஆனால், கொடியார் என்பதற்குக் கொடியேற்றுவோர் என்ற பொருளும் உண்டு, என்பதை விளக்கிக் காட்டவே நேற்றுச் சகோதரி மிராண்டா அம்மைக்கும் இன்று எனக்கும் கொடியேற்றும் பணியை நீங்கள் அளித்திருக்க வேண்டுமென எண்ணுகிறேன். பெண்களை இங்ஙனம் பெருமைப் படுத்திய உங்களுக்குப் பெண்கள் சார்பாக நன்றி கூறுகிறேன்.

சுயமரியாதை இயக்கத்தையும், அதன் குறிக்கோளையும், அதன் வெற்றியையும் குறிக்கும் அடையாளமே இந்தச் செந்நிறக் கொடியாகும். இதில் எந்த உருவமும் பொறிக்கப்படவில்லை. இது மக்கள் எல்லோரும் ஓரினமே என்பதை உணர்த்துகின்றது. இதன் நிறத்தை அபாயக்குறி என்று சிலர் பழித்துக் கூறினால், ஆம் எமது விரோதிகளுக்கு இது அபாயக்குறிதான் என்று விடை கூறலாம் நீங்கள். பகுத்தறிவிழந்து, அடிமையில் மோகமுடையாராய்; கண்ணை மூடிக்கொண்டு ஆழ்ந்ததோர் படுகுழியில் விழப்போகும் இந்நாட்டுப் பழங்குடி மக்களை வழிமறித்து, அறிவுறுத்தி நல்வழியில் செலுத்துவது தன்மதிப்பியக்கம் ஆதலால் அதன் கொடி அபாய அறிவிப்புக் கொடிதான் என்பதில் இழுக்கொன்றும் இல்லை. மூவேந்தர் அரசாண்ட தமிழ் நாட்டாரே! இந்தக்கொடியை ஏற்றுமுன் நமது இயக்கத்தைக் குறித்துச் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். சுயமரியாதை இயக்கம் ஈரோட்டில் பிறந்து, பெரியாரின் முயற்சியால் வளர்ந்து, குடி அரசில் விளையாடி, புராண மேடைகளில் வாதாடி, இந்தியுடன் போராடி, வாகை சூடிய ஓர் இளம் வீரனாக இன்று திகழ்கின்றது.

இந்த நாட்டில் பல இயக்கங்கள் உண்டு, அவற்றுள் இதுவும் ஒன்றாகும். காங்கரசுகட்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும், நீதிக்கட்சி, பிராமணரது அரசியல் ஏகாதிபத்தியத்தையும், ஆதித்திராவிடக்கட்சி ஜாதி இந்துக்களின் ஏகாதிபத்தியத்தையும், தொழிலாளர் கட்சி முதலாளிகளின் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்தும் போராடுவதாகச் சொல்லப்படுகின்றது. எனவே, ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு ஏகாதிபத்திய ஒழிப்பையே தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆனால் ஏகாதிபத்தியங்கள் அனைத்தையும் ஒருங்கே எதிர்ப்பது சுயமரியாதை கட்சியாகும். உண்மையான சுயமரியாதைக்காரன் ஏகாதிபத்தியத்தின் எதிரி என்றால் மிகையாகாது. சமூகம், மதம், பொருளாதாரம், அரசியல் முதலிய துறைகளில் ஏகாதிபத்தியம் இருக்கும்வரை இந்த இயக்கமும் இருந்தே தீரும். பகுத்தறிவை ஊட்டி, அடிமைத்தனத்தை ஓட்டி, மக்களை மக்களாகச் செய்வதே இந்த இயக்கத்தின் குறிக்கோளாகும்.

சுயமரியாதை இயக்கம் மதத்தைத் தாக்குகிறது என்று பலபேர் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர், என்னே இவர்தம் கூற்று. மதத்தின் பேரால் மூடநம்பிக்கைகளைப் புகுத்தி, அதன் மூலமாகக் கண்மூடிப் பழக்கங்களை வகுத்து, அதன் காரணமாக மக்களை அடிமைகளாக்கி அவர்தம் இரத்தத்தை உறிஞ்சுகின்ற கொடுமையைத்தான் சுயமரியாதைக்காரர் தாக்குகிறார்களேயொழிய மதத்தையோ அல்லது கடவுளையோ தாக்குவதில்லை எனப் பல மேடைகளிலும் சொல்லி வருகிறோம். அதை அறிந்தும் அறியாதார் போல் புறங்கூறித் திரிவதைப் பலமாகக் கண்டிக்கின்றோம்.

பலவித ஏகாதிபத்தியத்தையும் இவ்வியக்கம் எதிர்ப்பதால் இதற்குப் பகைவர்களும் பலர் என்பது சொல்லவும் வேண்டுமா? பிராமணர்கள், உயர்ந்த ஜாதியினர், பணக்காரர், புராணீகர், கலை ரசிகர்கள் முதலியோர் இவ்வியக்கத்தின் விரோதிகளாவர். செவ்வாடையைக் கண்டால் காளைகள் எவ்வாறு சீறுகின்றனவோ, அவ்வாறே செந்நிறக் கொடியைக் கண்ட தன்னலவாதிகளும் எங்க.

பகுத்தறிவும் சமநோக்கும் உடையவராய்; பதவிப் பட்டங்களில் விருப்பிலராய், பொதுநலத் தொண்டில் கருத்துடையாராய் உள்ள ஏழைகளும், சில பணக்காரரும், இளைஞர்களுமே இவ்வியக்கத்தில் பற்றுடையவராக இருக்க முடியும். நமக்கு அரசியல் பதவிகளில் மோகம் இல்லை. சட்டசபைத் தேர்தல்களில் இட்டம் இல்லை, அரசியல் ஆதிக்கத்தில் ஆசையில்லை, பொதுநலமே நமது இலட்சியம். சேவையில் நேரும் தொல்லைகளுக்கு அஞ்சுவதும் இல்லை; தொண்டு செய்தோம், சிறை சென்றோம்; பிரதி உபகாரமாக எங்களுக்கு

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# நாடு உயிரினும் பெரிது!

## தோழர் டி. பி. வேதாசலம் வரவேற்புரை

[திருச்சியில் 29-9-45 அன்று நடைபெற்ற 17வது திராவிடர் கழக மாகாண மாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் டி. பீ. வேதாசலம் பி. ஏ., அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரையின் சென்ற வாரத் தொடர்ச்சி]

### சீரழிந்த திராவிடம்

பிற்காலச் சோழர்களின் சிதைவுக்குப் பின்னர், திராவிட வரலாறு, கடந்த 1000 ஆண்டுகளாகவே குழப்பமாயுள்ளது. இந்தக் காலத்தில் நடைபெற்ற பல சம்பவங்கள், திராவிடனைத் தன் தனிச் சிறப்பையும், இனத்தையும் மறக்கச் செய்து, என்றென்றும் அடிமைத் தனத்தி லாழ்த்தும் ஓர் சமுதாய அமைப்பில் சிக்கவைத்து, பார்ப்பன சமயத்திற்கு முழு அடிமையாகச் செய்து விட்டன. தமிழரசுகள் மறைந்தொழிந்த பின், மராட்டியரும், மகம்மதியரும், விசயநகர அரசரின் வலிவிழந்த பரம்பரையினரும் நாட்டின்மேல் படையெடுத்து, சீர்குலைந்த ஆட்சியை ஏற்படுத்தினர்.

பார்ப்பனீயம், கோவில் மடச்சொத்துக்களால் கொழுத்தது மட்டுமன்றி நாட்டை அவ்வப்போது ஆள்வோருடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது. சமயாசிரியர்களான சம்பந்தர், அப்பர், சங்கரர், இராமானுசர் ஆகியோரின் காலத்திலே தமிழ் மன்னர்கள் தாழ்வுற்று மறைந்தனர். இந்த சமயாசாரியர்கள் போதித்த தத்துவம் இவ்வுலக வாழ்க்கைக்கு, இன்பமுடன் மக்கள் வாழுவதற்குத் தகுதியற்றது. காட்டில் வசிப்போருக்கும், நிர்வாண சந்நியாசிகளுக்குமே அது உகந்ததாயிருந்தது. இந்தத் தத்துவங்கள் பிறந்த பிறகு 1000 ஆண்டுகளில் முகம்மதியரும், கிறித்துவரும் ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், புறத்துறையில், சமயத் தலைவர்களின் ஆசியின்கீழ் வெற்றியடைந்தனர். இந்த 1000 ஆண்டுகளாகத் திராவிடன் மட்டும் இந்தச் சமயங்களால் ஏமாற்றப்பட்டு, உயர்சாதிக்காரரின் சூழ்ச்சிகளுக்கு அடிமையானான்.

### தலைவர் பெரியார்

ஆங்கிலக் கல்வி ஒரு சிலரது சிந்தனையைக் கிளறியதன் பயனாய் நம் இயக்கம் பிறந்தது. இருபத்தைந்து ஆண்டுகளின் உழைப்பும், எல்லாவற்றிற்கும் மேலாக பெரியாரவர்களின் திறமையும், இடைவிடாத பிரச்சாரமும், திராவிடரைத்தட்டி எழுப்பி, மதபோதையிலிருந்து தெளிவுண்டாக்கித் தாம் திராவிட நாட்டவர் என்பதை உணர்த்தியுள்ளன. அவர்களுக்கு நாடு உயிரினும் பெரிது. அதை அடையும்வரை அவர்கள் வாளாயிருக்கமாட்டார்கள்.

மேல்நாட்டவரின் சிந்தனா சக்தியும், கீழ்நாட்டவரின் தோற்றமும் ஒருங்கே உடையவரும், மனிதன் மனிதனாக வாழ வேண்டுமென்ற உரிமையில் அசையா நம்பிக்கையுடையவருமான தலைவர் பெரியாரவர்களிடம் திராவிடர்களுக்கு முழு நம்பிக்கை உண்டு. இன்னமும் சில மணி நேரம் நீங்கள் திராவிடரின் எதிர்காலத்தைச் சித்தரிப்பதில் ஈடுபட்டிருப்பீர்கள். தங்களின் முடிவுகள் தெளிவாகவும், உறுதியாகவும், இருக்க வேண்டியவை யாதலால், அமைதியாக, நன்றாக விவாதிக்குமாறு வேண்டுகிறேன்.

தோழர்களே! தாய்மார்களே! மீண்டும் ஒரு முறை இந்த முக்கியமான மாநாட்டிற்குத் தங்களனைவரையும் வரவேற்கிறேன்!

---

# ஆடு கொடியே!

(கனகம்மையார் இராமசாமி)

ஆடு கொடியே—பறந்தாடு கொடியே-இனி
ஆரியம் ஒழிந்த தென்று ஆடு கொடியே.

நானிலத்தி லேமுதலில் நாகரீகத்தை—இலை
நாட்டினான் தமிழன் என்று ஆடு கொடியே.
வானிலத்தி லேஎழுந்து ஆடு கொடியே—இனி
வாழ்வு உண்டு தாழ்விலையென் றாடுகொடியே (ஆடு)

ஒன்றே குலமுமென ஆடு கொடியே—தனி
ஒருவனே தேவன் என்று ஆடு கொடியே.
நன்றாய்த் தெளிந்தோமென்று ஆடு கொடியே—இனி
நமனுக்கும் அஞ்சோம் என்று ஆடு கொடியே. (ஆடு)

கண்மூடிப் பழக்கமெனும் காரியமெல்லாம்—நெடுங்
காலமாக வந்திருந்தும் தன்மதிப்பினால்
மண்மூடிப் போயினவென் றாடுகொடியே—இவை
மறுபடியும் வாராவென்று ஆடு கொடியே. (ஆடு)

இந்நிலை ஒழிப்பதிலே ஈடுபட்டதில்—நிகர்
இல்லையென்றே தலைவராய்ப் புகழ்பரப்பிச்
செந்தமிழைக் காப்பதற்குச் சிறைபுகுந்த—அவர்
சிறப்பினைச் சொல்லிச் சொல்லி ஆடு கொடியே.(ஆடு)

---

## புள்ளம்பாடி நீர்ப்பாசனத் திட்டம்

ஏற்கனவே போட்ட திட்டப்படி வெட்டப்போகும் புது வாய்க்காலை திருச்சி திருவேங்கிநாதர் மலைப் பக்கம் காவிரியிலிருந்து பிரிக்கவேண்டும். அப்படிப் பிரிப்பதால் பல தரிசு நிலங்கள் நஞ்செய்களாக மாறும். இப்போது பிரிக்க உத்தேசித்திருக்கும் மூக்கொம்பு என்னும் இடம் பெருவளை வாய்க்காலை ஒட்டி வருவதால் பல ஏக்கர் நன்செய் வீணாவதுடன் மக்களுக்கும் பயன்படாதாகையால் திருவேங்கிநாதர் மலையிலிருந்து புது வாய்க்கால் வெட்டப்படவேண்டுமென்று அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

மூன்: இ. மாணிக்கம்
பின்: வீ. பெருமாள்

(திருச்சி 17வது திராவிடர் கழக மாநாட்டில் நிறைவேறிய—பிரசுரிக்க விட்டுப்போன—தீர்மானம்)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடர் கழக நிர்வாக அங்கத்தினர்கள்

திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு மாநாட்டில் தெரிவித்துக் கொண்டபடி அந்தந்த ஜில்லா பிரதிநிதி மக்களால் அந்தந்த ஜில்லாக்களுக்குத் தலைவரிடம் கொடுக்கப்பட்ட பெயர்களின்படி வெளியிடப்பட்ட அங்கத்தினர்கள்.

கோவை.
N. அர்ச்சுனன், இளைய பட்டக்காரர், பழயகோட்டை.
S. R. சுப்பிரமணியம், பஞ்சு நூல் வியாபாரம், திருப்பூர்.
E. V. K. சம்பத், ஈரோடு.
A. சித்தய்யன், ஜவுளி நூல் வியாபாரம், கோயமுத்தூர்.

தஞ்சை.
K. K. நீலமேகம், வியாபாரி, புகையிலை சுருட்டு வியாபாரம், கும்பகோணம்.
V. சின்னதம்பி, கண்றாக்டர், கும்பகோணம்.
M. ராமாமிர்தம் அம்மை, மாயவரம்.
K. S. சிவராமகிருஷ்ணன், வியாபாரம், பட்டுக்கோட்டை.

சேலம்.
K. ஜகதீசன், வியாபாரி, குகை.
P. சோமசுந்தரம், மிட்டாதார், வேளுக்குறிச்சி.
M. R. சித்தய்யன், சோடா, கலர் வியாபாரம், சேலம்.
P. பொன்னுச்சாமி, வியாபாரி, தர்மபுரி.

திருச்சி
T. P. வேதாசலம் B.A., B.L., திருச்சி.
பராங்குசம், தொழிலாளி, பொன்மலை.
M. K. ராமசாமி, மணக்கால், லால்குடி.
இரத்தினம், நெசவுசாலை, கரூர்.

இராமநாதபுரம்.
K. ராஜசேகரன் B. A., B. L., வக்கீல், சிவகங்கை.
S. S. பழனிச்சாமி, வியாபாரம், அருப்புக்கோட்டை.

திருநெல்வேலி.
K. M. பிரமநாயகம். ஓட்டல், திருநெல்வேலி.
நீதிமாணிக்கம், வியாபாரி, தூத்துக்குடி.

தென்ஆற்காடு.
C. முனுசாமி, சைகிள் ஷாப் விருத்தாசலம்.
நமசிவாயம், நெசவுத்தொழில் புவனகிரி.

வடஆற்காடு.
V. T. திருநாவுக்கரசு, ஷாப்பு வியாபாரம், லாங்பஜார், வேலூர்.
R. சித்தாரெட்டியார், மிராசுதார், தண்டரம்பட்டு, செங்கம் தாலுக்கா.

மதுரை.
இ. சுக்குனி, வியாபாரி, மதுரை.
M. R. மத்திரன், வியாபாரி, திண்டுக்கல்.

சென்னை.
N. V. நடராஜன், தொழிலாளி.
தங்கராஜ், தொழிலாளி.
N. M. சுப்பிரமணியம், வியாபாரம்.
கோவிந்தசாமி, மெடிகல்ஹவுஸ், நைனியப்பநாயக் வீதி.
டாக்டர் S. தர்மாம்பாள், வைத்தியம்.

செங்கற்பட்டு.
C. N. அண்ணாதுரை M. A., பத்திரிகை ஆசிரியர்.
T. P. S. பொன்னப்பன் பாங்கர், காஞ்சீபுரம்.

நீலகிரி.
N. கிருஷ்ணசாமி B. A., B. L., சேர்மென், ஊட்டி.
N. நரசிம்மம், மிராசுதார், ஆனைமலை.

---

சேலம் அம்மாபேட்டை

# திராவிடர் கழக ஆண்டு விழா

4-11-45 தேதி ஞாயிற்றுக் கிழமை காலையும் மாலையும் சேலம் அம்மாபேட்டை திராவிடர் கழகத்தின் 7வது ஆண்டுவிழா பெரியார் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஜனார்த்தனம், கருணாநிதி, சம்பத்து முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

V. R. நாராயணன்,
S. வரதராஜு,
செயலாளர்கள்.

---

# மலேயாவில் நமது தோழர்கள்

மலேயாவில் சுகமாயிருப்பதாக கீழ்க்காணும் தோழர்களிடமிருந்து கடிதங்களும் தந்திகளும் வந்திருக்கின்றன.

ஜி. சாரங்கபாணி, "தமிழ் முரசு" ஆசிரியர், சிங்கப்பூர்.
எஸ். ராஜு, செரம்பான்.
எஸ். பி. எஸ். அய்யர், பினாங்கு.
ஆர். ஆர். அய்யாரு, ஈப்போ.
சுப. பழனியப்பா, ரெங்கூன்.

## மலேயாவில் பெரியார் பிறந்த நாள்!

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 67 வது பிறந்த தின விழாவை ஈப்போ (மலேயா) தமிழ் கம்பத்தில் 16-9-45லும், ஈப்போ தமிழ்ப் பாடசாலையில் 23-9-45 லும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

o o

23-9-45-ல் சிங்கப்பூர் ஹாண்டர்ஸன் ரோடு பாரதிதாசன் வாசகசாலையில் பெரியார் 67-வது பிறந்த நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

"தமிழ் முரசு"
சிங்கப்பூர்.

## மலேயாவில் பெரியார் மலர்

ஈப்போ பெரியார் பிறந்ததின விழாக் கழகத்தின் சார்பில் பெரியார் அவர்களின் 67-வது ஆண்டு நிறைவு விழா மலர் பெரியார் அவர்களைப் பற்றி அறிஞர்கள் கருத்துக்களைத் திரட்டியும், பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரித்தும் அழகிய முறையில் வெளியிடப்பட்டுள்ளது. மலேயா தோழர்களின் ஆர்வம் பெருக்கெடுத் தோடிக் கொண்டிருப்பதை விளக்க இம்மலர் ஒரு படப்பிடிப்பாகும்.

## பெரியார் தொண்டர் படைக்குப் பாராட்டு!

திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் அவர்களால் திருச்சி மாநாடுகளில் தொண்டாற்றிய பெரியார் தொண்டா படையினருக்கு 14-10-45-ல் ஒரு பெரிய விருந்தும், பாராட்டுக் கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது. அதற்குப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், மற்றும் தோழர் அருணாசலம் செட்டியார் முதலிய உள்ளூர்ப் பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர். தொண்டர் படையினருக்குத் தோழர் வேதாசலம் நன்றி தெரிவித்துக் கொண்டார். பெரியார் அவர்கள், தொண்டர் படையினரின் செயல்களைப் பாராட்டிப் பேசியதோடு அவர்களது வருங்காலக் கடமை பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள்.

ரோஜா முத்தையா

## நடக்க இருப்பவை!

26-10-45 வெள்ளி இரவு 10-30 மணிக்கு தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் தங்கவயலில் தன்மான நடிகர் கழகத்தாரால் 'ஞானோதயம்' நாடகம் நடைபெறும். பெரியார் அவர்களும் வருவாரென எதிர்பார்க்கப் படுகிறது.

அய்யம்பேட்டை மருத்துவர் கழக முதலாவது ஆண்டுவிழா 4-11-45-ல் நடைபெறும். தளபதி சி. என். ஏ., புலவர்கள் மாணிக்கம், இராமசாமி செட்டியார், ஏகாம்பரம், நடராஜ், பகவதி பி. ஏ., ஆகியோர் சொற்பெருக்காற்றுவர்.

திருச்சி மாநாட்டுத் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கும், தீர்மானங்களை ஆதரித்து 2-வது மாவட்ட திராவிடர் மாநாட்டைக் கூட்டுவதற்கும் 23-10-45 இரவு 9 மணிக்கு தூத்துக்குடி கழக மேடையில் நெல்லை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறுமாகையால் ஒவ்வொரு கிளைக் கழகமும் பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்பவேண்டுமாய் நெ. மா. தி. கழகச் செயலாளர் வேண்டுகிறார்.

28-10-45 ஞாயிறு மாலை 4 மணிக்கு திருப்பத்தூர் முனிசிபல் ஹைஸ்கூல் மைதானத்தில் மாபெரும் திராவிடர்கூட்டம் நடைபெறும். தலைவர் பெரியார் ஈ.வெ.ரா., தளபதி சி. என். ஏ., தோழர்கள் அன்பழகன், பூ. கணேசன் ஆகியோர் விரிவுரையாற்றுவார்கள். ஒலிபெருக்கி உண்டு.

இலவசப் படிப்பக ஆண்டு விழா கல்வார்பட்டியில் 21-10-45 ஞாயிறு இரவு 7 மணிக்கு நிகழும் தலைவர்: தோழர் என், அர்ச்சுனன், பேச்சாளர்: தோழர் கே. வி. அழகிரிசாமி அனைவரும் வருக.

புதுப்பேட்டை திராவிடர் கழக ஆண்டு விழா நவம்பர் மாத இறுதிக்குள் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். கழக கட்டிட நிதிக்காக தோழர் எம். ஆர். ராதாவைக் கொண்டோ அல்லது நாகை திராவிட நடிகர் கழகத்தாரைக்கொண்டோ ஒரு நாடகம் நடத்த ஏற்பாடாகிறது.

அய்யம்பேட்டை திராவிடர் கழக சார்பில் 25-10-45 மாலை தோழர் முத்து தனபால் பி. ஏ. பி. எல். தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் பலர் பேசுவார்கள்.

தஞ்சை எ. ஒய், எஸ். பரிசுத்த நாடார் தோட்டத்தில் 26-10-45 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. வி. அழகிரிசாமி ஆகியோர் விரிவுரையாற்றுவார்கள்.

பொன்மலை மேலக்கற்கண்டார் கோட்டை திராவிட நடிகர் கழகத்தாரால் 3-11-45 சனிக்கிழமை இரவு 9½ மணிக்கு 'வறுமையின் கொடுமை' என்ற நாடகம் பொன்மலை இன்டியன் இன்குட் கொட்டகையில் மேலக்கற்கண்டார் கோட்டை திராவிடர் கழக நிதிக்காக நடைபெறும்.

---

## சர்க்கார் அளித்த கௌரவப் பதவி விடுதல்

கௌரவப் பதவி விடுதல் என்ற தீர்மானத்தின் கருத்து தேர்தல் அல்லாமல் சம்பளம் அல்லாமல் சர்க்கார் நம் மக்களுக்கு அளித்து இருக்கும் நியமனப் பதவிகளை விட்டுவிடுவதாகும்.

தேர்தலில் வெற்றி பெற்ற ஜில்லா போர்ட், முனிசிபல் கவுன்சிலர், பஞ்சாயத்துப் போர்ட், யூனியன் முதலிய நகர, கிராம ஆட்சி மன்றங்களில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் அப்பதவிகளை விட்டுவிடவேண்டியதில்லை என்பதும் இந்தத் தேர்தல்களுக்கு நின்று வெற்றி பெறலாம் என்பதும் கருத்தாகும்.

இவை அந்தத் தீர்மானத்தைக் கூர்ந்து பார்த்தால் விளங்கும்.

## தேர்தல் மறுப்பு

தேர்தல் மறுப்பு (பஹிஷ்காரம்) என்பது பற்றிப் பல தோழர்கள் பல கருத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. திருச்சி தீர்மானத்தின் தேர்தல் பஹிஷ்காரம் என்பதின் கருத்து சட்டசபைத் தேர்தல்களில் அபேட்சகர்களாக நிற்பதோ, ஓட்டர்களாக ஓட்டு செய்வதோ கூடாது என்பதாகும்.

ஜில்லா போர்ட் முனிசிபாலிட்டி யூனியன், பஞ்சாயத்து, கூட்டுறவு முதலியவற்றின் தேர்தல்களுக்கு நிற்பதை திருச்சி தீர்மானம் தடுக்காது.

## காந்தி ஜெயந்தி என்றால் என்ன?

தேர்தல் பிரசாரத்தின் கக்கூஸ் சந்து வழியாகும்.

o o

காந்தி ஜெயந்திக்கு மாடுகளைக் கட்டி ஓட்டிச்செல்வது எதற்கு? ஓட்டர்களை மாடுகளாக (மிருகங்களாக)க் கருதி ஓட்டி, ஓட்டுப் பெட்டிக்கு அழைத்துச் செல்வதற்கு ஒரு நடிப்பு—

---

15-10-45 திங்கள் முதல்
இரவு 10-30 மணிக்கு
இராசீபுரம் ஓரியண்டலில்
நாகை திராவிட நாடக சபையாரால்
**“சாந்தா”**
என்னும் சமுதாய நாடகம்
தினசரி நடைபெறுகிறது.
கதை, வசனம்: மு. கருணாநிதி.
மானேஜிங் டைரக்டர்: ஆர். வி. கோபால்
D. R. மானேஜர்.

## எம்மிடம் தயாராயுள்ள புத்தகங்கள்

“திராவிடநாடு” ஆசிரியர்
தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள்
சொற்பொழிவுகளாகிய

| | ரூ. அ. பை. |
|---|---|
| நல்ல தீர்ப்பு (கூட்டலுடன் கூடியது) | 0—2—6 |
| நாடும் ஏடும் | 0—4—0 |
| திராவிடர் நிலை | 0—6—0 |
| **சீர்திருத்த சிறு கதைகள்** | |
| ஒடுக்கப்பட்ட நண்பர்கள் | 0—2—0 |
| பதிவிரதை பட்டம்மாள் | 0—2—0 |
| பைத்தியக்காரி காமு | 0—2—0 |
| தேவர்களின் நரகம் | |
| திரு. வி. க. மணிமடல் | 2—0—0 |

தபாற்செலவு தனி
“தமிழ் உலகம்” காரியாலயம்,
மண்ணடி, சென்னை.

## கருப்புச் சட்டைப் படை விளக்கம்

கருப்புச் சட்டைப் படை பற்றி பல இடங்களில் இருந்து விளக்கம் தெரிய கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

1. படைக்கு இதுவரை 200 வீரர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இனியும் இரண்டு மூன்று நாளில் 200 பேர்கள் பதிவான விபரம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. படைக்கு முழு நேரத்தொண்டர்கள் வேண்டும். ஆனால் அவர்கள் எங்காவது அழைக்கப்பட்ட உடன் அல்லது அந்தந்த இடங்களில் ஏதாவது ஒரு வேலை துவக்க வேண்டிக்கொண்டவுடன் முழு நேரப் படையினர்களாக ஆக்கப்படத் தயாராய் இருக்கவேண்டும்.

3. படையினருக்கு வேண்டிய பயிற்சிகள் ஒவ்வொருஜில்லா சென்டருக்கும் பயிற்சியாளர் வந்து பயிற்சி அளிப்பார். கவாத்தும், பாட்டும், சொற்பொழிவுத் தகுதியும் பயிற்சியாக அளிக்கப்படும்.

4. படை வீரருக்கு கருப்புச்சட்டை என்பது இடுப்பில் வெள்ளை வேஷ்டி அல்லது (பைஜாமா என்னும்) கால்ச் சட்டை அணிந்து உடலுக்கு கருப்பு அரைக்கை (Half arm) சட்டை அணிந்து கொண்டிருப்பதாகும். கருப்புச் சட்டை எப்போதும் அணிந்து கொள்ள வேண்டும்.

5. கருப்புச் சட்டை தலைமை நிலையத்தில் இருந்தும் அடக்க விலைக்கு எவரும் வரவழைத்துக் கொள்ளலாம். கழுத்து மார்பு உயரம் அளவு தெரிவித்தால் உடனே அனுப்பிக்கொடுக்கப்படும்.

6. தகுதி என்ற வார்த்தைக்கு கருத்து என்னவென்றால்தங்கள் வயது, படிப்பு, குடும்பத் தன்மை, வாழ்க்கை விபரம் முதலியவைகள் கொண்டதாகும்.

குறிப்பு: படையில் சேர்ந்து தொண்டாற்ற ஆசை கொள்ளுபவர்கள் இப்போது நிலைகுலைந்து மானமற்று கீழ்மைப்பட்டுக் கிடக்கும் திராவிட மக்கள் தங்கள் நிலை உணர்ந்து தலை நிமிர்ந்து மான உணர்ச்சி பெற்று மனிதத் தன்மை அடையவேண்டும் என்கின்ற அவாவுடன் அதற்கு அவசியமான எந்தக் காரியத்தையும் செய்யவும், அதனால் ஏற்படும் எப்பலனையும் அனுபவிக்கவும் முழுமனதுடன் ஆயத்தமாயிருக்க வேண்டியவர்களாவார்கள்.

### பிறப்பு

பொன்மலை திராவிட வாலிபர் கழக நடிக சபாவின் மிருதங்கப் புலவர் தோழர் ஜெகநாதன் இரண்டாம் புதல்விக்கு "கலிங்கராணி" என்ற பெயர் வைக்கப்பட்டதின் நினைவாக, "குடி அரசு", 'திராவிடநாட்டு'க்கு முறையே 1 ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## இன்றைய காங்கரசின் தன்மை

இன்றைய காங்கரசுக்கு நாட்டுப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று ஆகிய மூன்றும் தேசத் துரோகமும் வகுப்புத் துவேஷமும் ஆகும்.

அதாவது திராவிடநாடு என்பதும், திராவிட இனம் என்பதும், திராவிட மொழி என்பதும், காங்கரஸ்காரர்களுக்கோ, காங்கரஸ் திட்டத்திற்கோ வேப்பங்காயாக—விஷமாகக் கருதப்படுகிறது.

இவ்வளவுதானா ?

திராவிடநாட்டு செல்வத்தை மற்ற நாடு சுரண்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றால் அது சுயராஜ்ஜியத்திற்கு விரோதம் என்கிறார்கள்.

அவ்வளவோடு நிற்கிறார்களா?

திராவிடநாட்டின் எந்தவிதமான நடவடிக்கைமீதும் திராவிடநாட்டவனல்லாதவனின் சம்மந்தமோ ஆதிக்கமோ இருக்கக்கூடாது என்றால் அது பூரண விடுதலைக்கு விரோதம் என்கிறார்கள்.

இன்னும் பாருங்கள்!

இந்த நாட்டு மக்கள் யாவருக்கும் எல்லா வகுப்பாருக்கும் படிப்பு—உத்தியோகம்—வாழ்க்கை ஊதியம், அந்தஸ்து ஆகியவை சரிசமமாக இருக்கவேண்டும் என்றால் அவை மதம், அரசியல் தத்துவம், தகுதி ஆகியவைகளுக்கு விரோதமாகும் என்கிறார்கள்.

இவற்றையெல்லாம்விட அதிசயமென்னவென்றால்,

இப்படிப்பட்ட இந்தக் காங்கரசில் திராவிட மக்களில் சிலர் போட்டி போட்டுக் கொண்டு, எவ்வளவு அவமானமும், அலட்சியமும் ஏற்பட்டாலும் சிறிதும் கவலையற்றுச் சேர்ந்துகொண்டும் இருந்துகொண்டும் வருகிறார்கள்.

வேறுயார்?

இந்த நிலைமையில் நாடு, இனம், மொழி, செல்வம், அரசியல் ஆகிய துறைகளில் திராவிட நாட்டையும், திராவிட மக்களையும், அவர்களது நலனையும் கவனிப்பதற்கு இன்று இந்நாட்டில் திராவிடர் கழகத்தைவிட வேறு எந்த ஸ்தாபனம் வேறு எந்த நபர் இருக்கிறது?

சொல்லுங்கள் பார்க்கலாம்?

ஆகவே திராவிடர்கள் யாவரும் திராவிடர் கழகத்தில் சேருங்கள்.

தயார்!

இளைஞர்களே! மாணவர்களே! வரப்போகும் போராட்டத்திற்குத் தயாராய் இருங்கள்! கருப்புச் சட்டைப் படையில் பதிந்து கொள்ளுங்கள்.

---

### திருமணம்

துறையூரில் 1—10—45-ல் தளபதி அண்ணாதுரை தலைமையில் தோழர்கள் மருதமுத்து-மருதாம்பாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்களான ஈ. வி. கே. சம்பத், நெடுஞ் செழியன், ஜனார்த்தனம், அன்பழகன், நடிகர் து.வி. நாராயணன் ஆகியோர் பேசினர்.


வெற்றியடைந்தவுடன்

மே. த. கவர்னரின்

யுத்த நிதியானது "கஷ்ட நிவாரண சகாய நிதி"யாக மாறிவிட்டது.

இந்த மாறுதல் குறிப்பிடத்தக்கதாகவும், தேவை மிக அதிகமாகவும் இருக்கிறது.

எனவே

"கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு" என்று குறிப்பிட்டு

"ஹானரரி டிரஷரர், கவர்னர் கஷ்ட நிவாரண சகாய நிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா, சென்னை" என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பிக்கொடுக்கவும்.

# குடி அரசு

1945-ஹு அக்டோபர் மீ 20உ

## திராவிடத்தோழர்களே! தேர்தலுக்குப் பதறாதீர்கள்.

இன்று இந்நாட்டு அரசியல் உலகத்தை தேர்தல் முயற்சி அடிமைகொண்டு இருக்கிறது. நாட்டில் எங்கும் தேர்தல்பற்றிய பேச்சு, முயற்சி, நடத்தை, ஆகவும் போட்டிப் போராட்டமாகவும், இருந்து வருகிறது. இதன் பயனாகவே கட்சிகளுக்குள் உள் கலகமும் நடக்கிறது.

ஆனால் ஜஸ்டிஸ்கட்சியார் என்னும் திராவிடகழகத்தாராகிய நாம் இப்போதைய தேர்தலில் எவ்விதத்திலும் சம்மந்தப்படக்கூடாது என்று தீர்மானம் செய்துவிட்டு இந்தத்தடவை அல்லாமல் மறுபடியும் எப்போதாவது வரப்போகும் தேர்தலுக்கு மக்களைத் தயார் செய்யும் தொண்டில் ஈடுபட்டு இருக்கிறோம். அது மாத்திரமல்லாமல் இப்போதைய தேர்தலில் நின்று வெற்றி அடைந்து, பதவி பெற்று, அதிகாரத்தில் உட்கார்ந்து, ஆட்சிசெய்யப்போகும் காங்கரஸ் காரர்கள்மூலம் நமக்கு ஏற்படக்கூடிய கெடுதிகளில் இருந்தும், கொடுமைகளிலிருந்தும் தப்புவதற்கும், நம்மைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கும், நாம் தயாராய் இருக்கவேண்டிய காரியங்களையும் செய்ய இன்று முதலே திட்டம் போட்டு பணியில் இறங்கி இருக்கிறோம்.

இப்படிப்பட்ட இந்த இரண்டு முக்கியமான பணியில் நாம் ஈடுபட்டிருக்கும்போது, இன்றைய தேர்தல் பற்றிய கவலையோ எண்ணமோ கொண்டு பதறுவது திராவிட மக்களுக்குச் சிறப்பாக திராவிடக்கழக மக்களுக்குச் சிறிதும் பொறுத்த மற்றதும் காரிய அறிவற்றதுமாகும்.

இப்போது நமக்கும் இந்த சட்டசபை தேர்தலுக்கும் வெகுதூரமாகும். இன்று நாம் இத்தேர்தலுக்கு அபேட்சகர்களாக இருக்கவும் தகுதிஅற்றவர்கள் ஆவோம். நம் மக்களும் பெரிதும் நமக்கு ஓட்டுச் செய்யும் அறிவற்றவர்கள் ஆவார்கள்.

இன்றைய தேர்தலுக்கு வேண்டிய தகுதி பெறும் விஷயத்தில் நாம் ஏமாந்தவர்களாக ஆகிவிட்டோம். நம் ஓட்டர்களுக்கு நாம் யுத்தசம்மந்தமாய் நடந்துகொண்ட முறை பாராட்டக்கூடியதாயில்லை. இந்த நிலையில் தேர்தலைப் பற்றி ஆத்திரப்படுவதிலும், பதறுவதிலும் பயன் ஏற்படுமா? என்று சிந்திக்க வேண்டுகிறோம்.

இன்றைய சட்டசபை இந்த நாட்டு 100-க்கு 90 மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அற்றது என்றாலும், அங்கு யார் சென்றாலும் மக்களுக்கு உண்மையாய் வேண்டிய நன்மை எதுவும் செய்வது சுலப சாத்தியமல்ல என்றாலும் நமக்கு அபேட்சகராய் நிற்கத் தகுதி உண்டா? நாம் மக்களிடம் ஓட்டுப்பெற தகுதி உண்டா? நமக்கு ஓட்டு செய்யும் படியான அறிவு மக்களிடத்தில் இருக்கிறதா? என்பதுபற்றி நம் திராவிட மக்கள் தெரிந்துகொள்வதற்குஆகத்தான் இதை எடுத்துக் காட்டுகிறோம்.

இன்று தேர்தலுக்கு நிற்கும், நின்று வெற்றிபெறப்போகும் காங்கரஸ்காரர்களுக்கு சர்க்கார் ஒரு சர்டிபிகேட்டும் ஒரு லைசென்சும் அதாவது நற்சாட்சிப் பத்திரமும், அனுமதிச்சீட்டும் கொடுத்து இருக்கிறார்கள். அது என்னவென்றால்,

"காங்கரஸ்காரர்கள் 1942ம் வருஷத்தில் நாட்டில் செய்த நாசவேலை "தேசசேவை"யின் மூலம்,

342 ரயில்வே ஸ்டேஷன்களை (இடித்தும் கொளுத்தியும்) சேதப்படுத்தி இருக்கிறார்கள்.

945 தபாலாபீசுகளைக் கொளுத்தியும்,

60 ஓடும் ரயில் வண்டித் தொடர்களைக் கவிழ்த்தும்,

10000 அடி நீளம் 5000 அடி 1000 அடி 100 அடி நீளம் என்ற அளவுப்படி பல இடங்களில் ரயில் போகும் தண்டவாளங்களைப் பெயர்த்தும்,

பல இந்திய அதிகாரிகளைக் கொன்றும்,

பல கச்சேரிகளை ரிகார்டுகளுடன் கொளுத்தியும்,

கஜானாக்களில் கைவைத்தும்"

காங்கரசார் தொண்டாற்றி இருக்கிறார்கள் என்பதாக நற்சாட்சிப் பத்திரம் கொடுத்து இருக்கிறார்கள்.

(இந்தப் புள்ளி விபரம் வைசிராய் நிர்வாகசபை மெம்பரும், நிர்வாகசபை ரயில்வே மெம்பரும் கொடுத்திருப்பதாகும்.

இது 6-5-45 சுதேசமித்திரனிலும், 3-10-45 சுதேசமித்திரன் பக்கம் 4, கலம் 2-லும் இருப்பதைக் கொண்டதாகும்)

## தீபாவளி

நம் திராவிட மக்கள் தீபாவளி பண்டிகை கொண்டாடாமல் இருக்கச்செய்வது இவ்வருஷம் நம் தொண்டர்களுடைய முதல் வேலையாகும்.

திராவிடர் கழகத்திற்கு 35000 மக்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்றால் குறைந்தது ஒரு பத்துஆயிரம் மக்களாவது தீபாவளி பண்டிகை கொண்டாடாமல் இருந்தால்தானே பாராட்டக் கூடியதாக இருக்கமுடியும்.

தீபாவளி என்பது கதையின்படி ஒரு திராவிட நாட்டு மன்னனை ஆரியன் சூட்சி செய்து கொன்ற நாளைக் குறிப்பு வைத்துக் கொண்டாடும் விழாவாகும். இது உண்மையாய் நடந்திருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தக் கதையும் இந்த விழாவும் திராவிடர்களை மடையர்களாகவும், மானமற்றவர்களாகவும் ஆரியர்களால் கருதி வந்த காரியமாகும்.

ஆதலால் அந்தக் கதைப்படி அந்த திராவிட மன்னன் கொல்லப்பட்ட நாளாக வரும் அந்த தீபாவளி நாளில் திராவிடர்கள் பண்டிகை கொண்டாடாதிருப்பதோடு திராவிட வீர மக்களாய் இருப்பவர்கள் சவுகரியப்பட்டால் துக்கக்குறியான கருப்புச் சட்டை அணிந்து துக்கம் கொண்டாடி தெருக்களிலும் தங்கள் துக்கக்குறியாக, "திராவிட மன்னனைக் கொன்ற ஆரியக்கூட்டம் ஒழிக" என்று ஊர்வலமாக ஒலித்துக் கொண்டு ஒரு பொது இடத்தில் கூட்டம் கூட்டி, அக்கதையை திராவிடமக்களுக்கு விளக்கி சொற்பொழிவாற்றலாம்.

இது உண்மையில் திராவிடமக்களை இழிவு படுத்தும் மற்றக் கதைகளையும் பண்டிகைகளையும் மக்களை தெரிந்து கொள்ளச் செய்யும்.

# கருப்புச் சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கருப்புச் சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப்படுவார்கள் ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தகப்பன் பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

அன்றியும், இந்தக் காரியம் எதற்கு ஆகச் செய்யப்பட்டது என்றால், அதாவது "பிரிட்டிஷ்காரனே இந்தியாவை விட்டு வெளியே போ என்பதற்கு ஆகச் செய்யப்பட்ட தேச சேவையாகும்" என்பதை ஓட்டர்களிடம் சொல்லி ஓட்டுப் பெறுங்கள் என்று லைசென்சும் (அனுமதித்தது போல் இடம்) கொடுத்து இருக்கிறார்கள்.

காங்கரசாரும் 'வெள்ளையனை வெளியேற்றும்' பிரச்சினை மீதே அதாவது 'வெள்ளையன் வெளியேறாவிட்டால் மறுபடியும் போராட்டம் துவக்குவதற்கே" (மறுபடியும் இடித்து, கொளுத்தி, பெயர்த்து, கொன்று, கஜானாவில் கைவைப்பதற்கு) தயார் ஆவதற்கு என்ற பிரச்சினைமீதே, "நில்லுங்கள்" என்று சன்னது பெற்று இருப்பதுபோலவே நடந்துகொள்ளுகிறார்கள். இதை தினமும் பத்திரிகையில் பார்க்கிறோம். சர்க்காரும் இதை மறுத்துச் சொன்னதாகவோ மாற்றிக்கொள்ளும்படி கேட்டதாகவோ தெரியவில்லை. ஓட்டர்களும் இவர்கள் (காங்கரஸ்காரர்கள்) கூட்டங்களில் இப்படிச் சொல்லும்போது கைதட்டுகிறார்கள்.

நாம் கூட்டத்தில் ஒரு வார்த்தை சொல்லும்போது கூட்டத்தில் உள்ளவர்கள் கை தட்டினால் என்ன நினைக்கிறோம்? நம் பேச்சைக் கூட்டத்திலுள்ளவர்கள் ஆதரிக்கிறார்கள் அல்லது நம் பேச்சைக்கேட்டு மகிழ்ச்சி அடைகிறார்கள் என்றுதானே கருதுகிறோம். அதுபோலவே காங்கரசார் இப்படிச் சொல்லுவதை மக்கள் ஆதரிக்கிறார்கள் — மகிழ்ச்சி அடைகிறார்கள் என்றுதானே கருதவேண்டும். பொது மக்களிடம் இவ்வளவு வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சர்க்காரை ஆதரித்ததாகக் காட்டிக் கொண்ட நாம் எந்த முகத்தைக் கொண்டு இந்தப் பொது மக்களை ஓட்டுக்கேட்க முடியும் என்று கேட்கிறோம்.

எலெக்ஷனுக்கு நிற்பது ஓட்டர்களுக்கு அரசியல் ஞானம் புகட்டுவதாகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லி நிற்பவர்கள் பெரும்பாலும் தேர்தலுக்கு நின்றால் விளம்பரம் பெறலாம் அல்லது தேர்தலின் பேரால் மக்களிடம் பணம் வசூலித்து ஏமாற்றிப் பிழைக்கலாம் என்றே கருதித்தான் சொல்லி இருக்கலாம் என்று கருதுகிறோம்: தேர்தல் இல்லாத காலத்தில் தேர்தலைப் பற்றிக் கவலையே இல்லாமல் சிலர் பட்டம் பதவிக்குப் பல்இளித்து அலைந்துகொண்டும், சிலர் ஊர் மக்களை ஏமாற்றிப் பொறுக்கி வயிறுவளர்த்துக்கொண்டு, சர்க்கார் கட்டடங்களை வலம் வந்து, சர்க்கார் அதிகாரிகள் காலில் விழுந்து கும்பிட்டு கூலி பெற்றுக்கொண்டும் இருந்துவிட்டு தேர்தல் வந்த உடன் மக்களுக்கு அரசியல் ஞானம் ஊட்ட நிற்கிறேன் என்றும், அல்லது போட்டியில்லாமல் வேறு ஒருவனை பதவிக்குச் செல்லவிடாமல் நிறுத்துகிறேன் என்றும், ஒருவர் சொன்னால் அதன் கருத்து என்ன என்று கேட்கிறோம். அதுவும் பொதுவுக்கு என்று ஒரு காசும் செலவு செய்யாமல், ஒரு மணி நேரமும் வேலை செய்யாமல், சதா பணம் அடிப்பதிலும், சதா தன் காரியத்திலும், தகுதிக்கு அதிகமான வாழ்வு வாழ்வதிலும் காலத்தைக் கடத்திக்கொண்டு ஊர் சிரிக்க, நாடு சிரிக்க நடந்துகொண்டு பகலில் ஒண்டியாய் தெருவில் நடக்கமுடியாத நிலையில் இருந்துகொண்டு, எந்த சாதாரண மனிதனும் தன்னை, "இந்த மனிதனைப் போன்றவன் தானே நீ" என்றால் உடனேமானநஷ்டத்துக்குப்பிராது போடத்தக்க அளவு கோபமும், ஆத்திரமும் அடையும்படியான "டிரேட் மார்க்கை"யும் அடைந்துவிட்டு "தேர்தலுக்கு நின்று கட்சிக் கௌரவத்தைக் காப்பாற்றப் போகிறேன்" என்று யாராவது சொல்ல வருவார்களானால் இதைவிட பித்தலாட்டக் காரியமும், ஈன வாழ்வும் வேறு யாரிடம் பார்க்க முடியும்? என்று கேட்கிறோம். இன்றைய தினம் திராவிட மக்களின் தன்மை இவ்வளவு கீழான நிலையில் இருக்கிறது என்று காட்டுவதற்குத்தான் இப்படிப்பட்டவர்கள் தேர்தலுக்கு நிற்பது உதவுமே தவிர கட்சிக்கோ, பொதுநலத்துக்கோ எந்த விதத்தில் மரியாதை ஏற்படும் என்று கேட்கிறோம்.

காங்கரஸ்காரர்கள் தாங்கள் சிறை சென்றதையேபெரிய யோக்கியதாம் சமாகக் கொண்டு 'நாங்கள் தியாகம் செய்தோம், தியாகம் செய்தோம்' என்றும், தியாகம்செய்யாத துரோகிகளுக்கு, சுயநலக்காரருக்கு, தியாகம் செய்த எங்கள் தேச சேவையைத் தடுத்த, காட்டிக்கொடுத்த வஞ்சகர்களுக்கு, சர்க்கார் அடிமைகளுக்கு ஓட்டுப் போடலாமா? உங்களுக்கு தேசாபிமானம், சொந்த மானம்

இல்லையா என்றும் தானே பட்டாங்கமாக பச்சையாகச்சொல்லி ஓட்டுக் கேட்கிறார்கள்.

அவர்கள் (காங்கரஸ்காரர்கள்) செய்த அக்கிரமம், அடித்த கொள்ளை, நடந்துகொண்ட நாணையமற்ற காரியம், பித்தலாட்டம், சூட்சி, மக்களுக்கு செய்த கேடு, திராவிடநாட்டில் ஆரியமொழியை வலுவில் 1500 பேரை சிறைக்கனுப்பிப் புகுத்தச் செய்த காரியம், போட்ட வரி, மக்களை நடத்திய கொடுமை எல்லாமுமே "நாங்கள் ஒரு தடவை ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தோம்" என்ற உடனே ஓட்டர்கள் மறந்து ஓட்டுப் போட்டுவிடுவதையும் நாம் பார்த்து வருகிறோம். இதுமத தத்துவத்தில் எப்படிஒருவன் தாயைக் காதலித்துக் கலந்து தந்தையைக் கொன்று கொடும் பாதகம் செய்தாலும் ஒரு தடவை சிவா என்றால், ஒரு துளி "தீர்த்தம்" மேலே பட்டால், குப்பைச் சாம்பலில் புரண்டநாய்உதறிக்கொள்ளுவதன் மூலம் ஒரு துளி தூசிச் சாம்பல் மனிதன் செத்த பிறகு அவன் பிணத்தின் மீது பட்டால் சகல பாபமும் எப்படிப் பறந்தோடிப் போகிறதோ அதுபோல் தானே அரசியல் தத்துவத்திலும் இது (சிறை செல்லுவது) ஆகிவிட்டதை இல்லையென்று யாராவது இன்று மறுக்கமுடியுமா என்று கேட்கிறோம்.

ஆகையால் தேர்தலுக்கு நிற்பவர்கள் ஜெயிலுக்குப் போக முடியாதவர்களாய் இருந்தாலாவது அல்லது அது சரி அல்ல என்று பட்டாலாவது ஜெயிலுக்குப் போவதை மறுத்து மக்களுக்கு எடுத்துக் கூறி மக்களை ஜெயில் நம்பிக்கையில் இருந்து திருப்பவேண்டும். இல்லாவிட்டால் பாவம் தொலைய என்று பழனிக்கும், திருச்செந்தூருக்கும் பல தடவை போய்வருகிற மாதிரியாவது ஒரு தடவை ஜெயிலுக்கும் போய்வர வேண்டும்.

கெடுதி விளைவிக்கும் சட்டத்தை மீறி, நலம்செய்யாத சர்க்காரை எதிர்த்து சிறை செல்லுவதும், சென்று வருவதும் மனிதனுடைய கடமையாக ஆகிவிட்டது. ஏனெனில் மனிதனின் அறிவு வளர்ச்சி பெறுவது போலவே அவனது முயற்சியும் வளர்ச்சி பெறவேண்டும். துணிவும் வளர்ச்சி பெறவேண்டும். முயற்சியும் துணிவும் இல்லாமல் எந்தக் காரியமும் நடைபெறுவது என்பது முடியக்கூடிய காரியமல்ல என்றே கருதுகிறோம்.

வெள்ளைக்கார சர்க்காரையும் வெள்ளைக்கார சட்டத்தையும் எதிர்ப்பதற்கென்றோ மாற்றுவதற்கு என்றோ நாம் இப்படிச் சொல்லவில்லை. நமக்கு மாறான, நம் நலத்துக்கு கேடான, நமக்கு இழிவையும் கேட்டையும்உண்டாக்கும், நல்லெண்ணமும் யோக்கியப் பொறுப்பும் அற்ற எந்தச் சர்க்காரானாலும் ஒழிக்கப்பட தயாராய் இருக்கவேண்டும். அதற்கு எந்த முறையையும் கையாளத் துணிவு வேண்டும்.

சட்டத்தின் ஒழுங்கு முறை எவ்வளவு நீதியாய் இருந்தாலும் ஒண்டியாய்த் தனி வழியில் செல்வதானால் கையில் பணம் இருந்தால், அல்லது எதிரிகள் இருந்தால், நாம் தடியும், கத்தியும், துப்பாக்கியும் கூட கொண்டு செல்லுகிறோமா இல்லையா? அதுபோல் நம் கையில் 'ஆயுதம்' இருந்தாக வேண்டும். அதுதான் இப்போது சிறை செல்லத் தயாராகவும், சென்று பழக்கமுள்ளவர்களாகவும் நாம் இருக்கவேண்டும் என்பது. இந்த நிலை இன்று உலக நாகரீகத்தில் முதன்மை பெற்றுவிட்டது. அதனால்தான் வெள்ளையரும் காங்கரசார் சொல்லுகிறபடி"நாங்கள்நாட்டைவிட்டுப் போகிறோம்" என்று ஒப்புக்கொண்டுவிட்டதோடு கையில் ஆயுதமுள்ளவர்களாகப் பார்த்து அவர்களை எடுத்துக்கொள்ளும்படியும் நேரில் அழைத்து விருந்திட்டுச் சொல்லுகிறார்கள். ஆகவே திராவிட மக்களாகிய நீங்கள் இன்று உங்கள் கையில் என்ன ஆயுதம் வைத்திருக்கிறீர்கள்? நிராயுதபாணியாய் இருக்கிற இந்தநிலையில் சட்டசபைத் தேர்தலைப் பற்றிப் பதறுவதில் என்ன லாபம் என்று கேட்கிறோம். ஆகவே தயாராகி நாட்டைக் கேளுங்கள். பதறாதீர்கள்.

---

# அனாவசியமான தொல்லை

## சாயப்பட்டரைக்கு கண்ட்ரோல் ஏன்?

## (Dyes Control Scheme)

1942-ம் வருடம், டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட சாயப்பட்டரையாக இருக்கவேண்டுமென்றும், அதற்கு முன் அது எவ்வளவு காலத்தியதாக இருந்தபோதிலும் 1942, 43, 44, 45 வருடங்களில் வேலை செய்யாத சாயத்தொழிற்சாலையாக இருக்குமானால் லைசென்ஸ் கொடுக்கப்படமாட்டாது என்றும் ஓர் புதிய சட்டம் சர்க்காரால் வெளியிடப்படும்போல் தெரிகிறது. இது உண்மையாயின் சாயத் தொழில்காரருக்குப் பெருத்த தீமை உண்டாக்கும் காரியமாகும். இந்நாட்டுக்கைத்தறி நெசவுகளுக்கு ஆதாரமாய் இருப்பதுசாயப்பட்டரைகளாகும். கைத்தறி நெசவுள்ள இடங்களிலெல்லாம் சாயப்பட்டரை இருப்பதேயாகும். இவைகள் பெருத்த ஆலைக்காரர்களும், பழைய பெருச்சாளிகளாகவே இருக்கவேண்டுமென்று சட்டம் போடுவது மிக்க அநீதியான காரியமாகும். இம்மாதிரியான சட்டத்திற்கு இப்போது எவ்விதமான அவசியமும் ஏற்படவில்லை. கூலிகள் தாராளமாய்க் கிடைக்கவும், சாய சாமான்கள், மருந்துகள், தாராளமாய்க் கிடைக்கவும், கட்டிடம் முதலிய சாதனங்கள் தாராளமாய்க் கிடைக்கவும் ஆன இந்த சந்தர்ப்பத்தில் எதற்காகக் கண்ட்ரோல் ஏற்பட வேண்டும்? சேலம், கோயமுத்தூர்,தென்னார்காடு, மதுரை, இராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களில் வர்ணத் துணிகளே நெய்யப்படுகின்றன. அந்தந்த இடங்களில் ஏராளமான சாயப்பட்டரைகள் இருந்தால்தான் சரசமாகவும், வசதியாகவும் தொழில் நடந்து மக்களுக்கு அனுகூலம் ஏற்பட முடியும். ஏழைகளும் நன்மை அனுபவிக்கமுடியும். இந்த சாயப்பட்டரை விஷயத்தில் வைக்கும் Control பாமர ஜனங்களுக்கு எவ்வித நன்மையும் அளிக்கப்போவதில்லை. அன்றியும் சர்க்காரார் மற்ற அனேக கண்ட்ரோல்களை எடுத்துவிடவும், தளர்த்தி விடவும் இருக்கிற இந்த சந்தர்ப்பத்தில் இந்தக் கண்ட்ரோல் ஏற்படுத்துவது நியாயமும் அறிவுடைமையும் ஆகாது.

## காங்கரசிலிருந்து விலகினார்?

முத்துப்பேட்டைத் தோழர் மா. தர்மலிங்கம் அவர்கள் காங்கரஸ் கட்சியிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டார்.

ரோஜா முத்தையா
...ய்ச்சி நூலக அறக்கட்டளை

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ரா, அவர்கள் இம்மாதம் 16ந்தேதி ஈரோடு வந்து சேர்ந்தார்.

மறுபடியும் 19ந்தேதி சென்னை செல்கிறார்.

20, 21 சென்னை
22 ஈரோடு
24, 25 சென்னை
28 திருப்பத்தூர்
4-11-45 சேலம்

### தீபாவளிப் பண்டிகை ஏன் வருகிறது?

திராவிட மக்களின் மானமற்ற தன்மையை அளந்து பார்ப்பதற்கு ஆக ஒரு அளவு கருவியாய் தீபாவளி வருகிறது.

o o

இராமாயணத்தில் திராவிட மக்களைத் தான் குரங்கு, அனுமார் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பது தெரிந்திருந்தும், திராவிடன் அனுமந்தன், அனுமார் படை என்று ஒரு படை திரட்டி அதில் சேரவும் அனுமாரைக் கடவுளாக வணங்கவும் தயாராக இருக்கும் திராவிடன் இப்படிப்பட்ட தீபாவளி கொண்டாடுவது ஒரு அதிசயமாகுமா?

o o

இதைப் பார்க்கும் நாம் "ச்சை மானங்கெட்ட பதரே! தீபாவளி கொண்டாடாதே" என்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.

### திராவிட மாணவர் மாகாண மாநாடு

10-10-45-ல் திராவிட மாணவர் மாகாண மாநாட்டு வரவேற்புக் கழக கூட்டம் ஈரோடு திராவிட மாணவர் கழகத்தில் தோழர் எஸ். தவமணிராசன் தலைமையில் நடந்தது. ஷை மாநாட்டை சென்னையில் நவம்பர் 10, 11-ந் தேதிகளில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. மாநாட்டு வரவேற்புக் கட்டணம் ரூபாய் 2. பிரதிநிதிக்கட்டணம் ரூபாய் 1. பார்வையாளர் கட்டணம் அணா 8. என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆங்காங்கிருந்து வந்திருந்த மாணவத் தோழர்களிடம் நன்கொடை ரசீது புத்தகம் ஸ்கூலுக்காக கொடுத்தனுப்பப்பட்டது.

### தலைவர் பெரியார் பேட்டி

14-10-45 ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 9½ மணிக்கு திருச்சி ஜங்ஷனில், மாயனூர் எம். பி. குமாரசாமி, சித்தூர் மைனர் சுப்பிரமண்யம், காட்டுப்புத்தூர் ஆர். ஓ. ராஜன், கே. பி. காத்தமுத்து, கே. பி. வேம்படி இன்னும் சில தாழ்த்தப்பட்ட சமூகத்தின் முன்னேற்றச் சீர்திருத்தக்காரர்கள் திராவிடத் தலைவர் பெரியார் அவர்களை அவர்களுடைய அனுமதியின் பேரில் பேட்டி கண்டனர். அவ்வமயம், வரப்போகும் எம். எல். ஏ., தேர்தலில் துறையூர் வி. எம். பழனிவேல் அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் தொகுதிக்கு நிறுத்த முயற்சி எடுப்பது பற்றியும், ஷெடியூல்டு பள்ளர் ஹாஸ்டல் ஒன்று காட்டுப்புத்தூரில் ஏற்படுத்துவது பற்றியும், அவரது யோசனைக்கு விடப்பட்டது. ஹாஸ்டல் நடத்துவது பற்றி ஆட்சேபனையில்லையென்றும், தேர்தல் விஷயம் இன்னும் சில நாள் கழித்து யோசனை செய்து முடிவு கூறலாம் என்றும் கூறினார். திராவிடக் கழகம் முதலான சங்கங்களில் உள்ள சாதி இந்துக்களில் சிலர் சாதி வித்தியாசம் பாராட்டுவதைக் குறித்தும், தாழ்த்தப்பட்ட மக்களைக் கேவலமாய் நடத்துவதைக் குறித்தும் எடுத்துச் சொல்லியதை மிக்கப் பரிதாபத்தோடு கேட்டு வருந்தினார்.

"ஆரியர்

திராவிடரைக் கொன்று"

வெற்றிபெற்ற நாளாகிய

## தீபாவளியை

கொண்டாடி

ஈனத்தன்மையைக்

காட்டிக்கொள்ளாதீர்கள்.

---

கணியூரில் 5-10-45ந் தேதி திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் தோழர் உதுமான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அங்கமுத்து, தமீசுத்தீன், லத்தீப்; கே. எ. மதியழகன் ஆகியோர் பேசினார்.

## பதவி விட்டனர்!

திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க தர்மபுரி தோழர் பி. பொன்னுசாமி அவர்கள் தமக்கிருந்த நியமனப் பதவியாகிய கௌரவ மாஜிஸ்ட்ரேட் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறார்.

o o

திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க மூவலூர் தோழர் இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் மாயவரத்தில் தமக்கிருந்த நியமனப் பதவிகளான, யுத்தக் கமிட்டி உறுப்பினர், ரேஷன் கமிட்டி உறுப்பினர், கல்விக் கமிட்டி உறுப்பினர், மெடிகல் அட்வைசரிக் கமிட்டி உறுப்பினர் ஆகியவைகளை ராஜிநாமாச் செய்துவிட்டதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறார்.

o o

திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற் கிணங்க பேரளம் தோழர் என். மகாதேவன் அவர்கள் கீழ்க்கண்ட நியமனப் பதவிகளை ராஜிநாமாச் செய்து விட்டதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறார்.

1. ஜில்லா லேபர் அட்வைசரிக் கமிட்டி மெம்பர்.
2. தண்டனை முடியு முன்பு விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் கண்காணிப்பு அதிகாரி.
3. கௌரவ ரிக்ரூடிங் அதிகாரி.

### தீபாவளி கொண்டாடாத தீரர்கள்!

(திராவிடர்க்கு இழுக்கு தரும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதில்லையென உறுதி செய்து தங்கள் உறுதிமொழிச் சீட்டுகளை அரிசிபாளையம் அன்பர்கள் அனுப்பியுள்ளனர். அவர்கள் இவர்கள்!)

தோழர்கள் கே. எஸ். முனுசாமி, கே. வேலாச்சாமி, பி. எஸ். கிருஷ்ணன், கே. வி. ராஜரத்தினம், பி. ஆர். முத்தியாலு, பி. எஸ். கோபால், கே. எஸ். வேணுகோபால், பி. எல். பருவதம், எம். எஸ். சந்த்ரா, எஸ். சரஸ்வதி.

(இன்னும் வரும்)

### அறிவிப்பு

28-10-45 ஞாயிறு மாலை 3 மணிக்கு மதுரை மாவட்டத் திராவிடர் கழக அங்கத்தினர்கள் பொதுக்கூட்டமும் ஜில்லா நிர்வாகஸ்தர்கள் தேர்தலும் மதுரை லட்சுமிபுரம் தோழர் க. இ. சக்குணி வீட்டில் நடைபெறும். மதுரை ஜில்லா திராவிடர் கழக அங்கத்தினர் அனைவரும் வருக.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## குண்டு வீச்சு!

(விமானி)

### இவரை அவர் அழைக்கிறார்!

இந்தோனேசியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு டாக்டர் சோகர்னோ பண்டித நேருவை அழைக்கிறார். எங்கே யுள்ள நேருவை? தண்டவாளங்களின் அடியில், தபால் ஆபீஸ் தீயில், தந்திக் கம்பி அறுப்பதில், இந்தியர் ஏறிய ரயில் கவிழும் வேகத்தில் சுயராஜ்ய தரிசனங் காண விரும்பிய தேசிய வீரர் வாழும் இந்தியாவிலுள்ள (ஆகஸ்டுக்கு மார்தட்டும்) அதே நேருஜீயைத்தான்! குருடனை வழி கேட்கும் கதைக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டு!

### கம்யூனிஸ்ட் தீபாவளி!

தீபாவளி வருகிறதே—தணியில் லையா? என்ற கூச்சலை கம்யூனிஸ்ட் தோழர்கள் கிளப்புகிறார்கள். தீபாவளிப் பண்டிகையிலே மட்டும் என் அவ்வளவு மோகமோ தெரியவில்லை, மதமொழிக என்ற அந்த மார்க்ஸ் கொள்கையினருக்கு! நாம் சொன்னதை எதைத்தான் கேட்டார்கள் அந்த மாஜி காங்கிரஸ் பக்தர்கள் இதைக் கேட்பதற்கு! ஆனால் அதோ அக்கிரகாரம் ஆனந்தப் படுகிறது, அது போதும் அவர்களுக்கு!

### கப்ஸாமயம்!

சான்பிரான்ஸிஸ்கோ மாநாட்டாலோ மற்ற எந்தத் திட்டத்தாலோ உலகில் சமாதானம் ஏற்படாது. காந்தியாரும் அவரது அகிம்சைக் கொள்கையும்தான் சமாதானக் கைகாட்டிகள் என்று தேசிய ஏடுகள் கூறுகின்றன. கோகலேஹால் குழப்பத்தையும், சேலம் காந்தி ஜெயந்திக் கல்வீச்சையும், காமராஜ்-ஆச்சாரியார் போராட்டத்தையும், ராஜபாளையம் மாநாட்டுக் கலகத்தையும், பம்பாயில் கம்யூனிஸ்டுகளை காங்கரஸ் தொண்டர்கள் படுகாயப் படுத்திய செய்தியையும் அந்தத் தினசரிகள் பிரசுரிக்காமல் இருந்திருந்தாலும் மேற்கண்ட கூற்றை நம்ப இடமேற் படும்மேல்நாட்டாருக்கு! என்னமோ-எல்லாம் கப்ஸா மயம் காங்கரஸ்!

### நல்ல தந்திரம்

"காந்தியார் தமிழ் கற்றுக்கொள்வதில் அதிக ஆர்வங்காட்டுகிறார், தமிழில் கையெழுத்துப்போடுகிறார்" என்று ஆரியப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டின்மேல் வடநாட்டாருக்குள்ள 'ஆசையை' எடுத்துக்காட்டி ஓட்டு வாங்க இது ஒரு நல்ல தேர்தல் தந்திரந் தான்! ஆனால் தமிழர்கள் இந்தி வெள்ளாட்டியின் நுழைவை இதற்குள் மறந்து விடவில்லை!

—

தூத்துக்குடி திராவிடர் கழகத்தின் ஆதரவில் 23-9-45-ல் கொண்டாப்பட்ட பெரியார் பிறந்த நாள் விழாவில் பெரியார் பட ஊர்வலமும் தோழர் வி. சின்னமணி தலைமையில் பொதுக்கூட்டமும் நிகழ்வுற்றது. பல் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

ஜெயராம்
அயகாந்த லேகியம்

உடல் வெளுத்துப் பழுத்து வீங்கி, மேல் சுவாசங்கண்டு நடக்கச் சக்தியற்று தள்ளாடித் தவிக்கும் பாண்டு சோகை, சுருக்கென்று குற்றிவலிக்கும் வாய்வு வலி, வயிற்றுப்போக்கு, அதிசாரம், கிராணிப் பேதி, காமாலை, பசியின்மை, நாக்கு, மூக்கு ருசி வாசனையற்றிருத்தல், மயக்கம், வாயில் நீரூறல், பிரசவமான பிறகு பெண்களுக்கு ஏற்படும் கை கால் வீக்கம், உடல் அரிப்பு, தடிப்பு முதலிய நோய்களை அகற்றி இரத்தத்தை சுத்தி செய்து முக வசீகரத்தையும் தந்து பூரண பலத்தையும் கொடுக்கும். விலை சேர் ரூ. 5-0-0 வி. பி. வேறு.


ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி,
கும்பகோணம்.

80-வருட அனுபவம்

1872ம் முதல் ஆங்கில மருந்து முறையும் இணைப்பு

குரு மருந்துகள்

பர்மா, சிலோன், மலேயா, தென்னாப்பிரிகா முதலிய வெளிநாடுகளிலும், இந்திய வட மாகாணங்களிலும் சிறப்புற்றவை.



(CHILDREN'S HEALTH SET)

குழந்தைகள் பாதுகாப்புக்கு
1-செட் 7-மருந்துகள்

| | | | |
|---|---|---|---|
| 1. குரு கோரோஜனை மாத்திரை | 0–12–0 | 2. குரு கஸ்தூரி மாத்திரை | 0–12–0 |
| 3. குரு பாலர் வயிற்றோட்டமருந்து | 0–14–0 | 4. குரு வேப்பெண்ணை தைலம் | 1– 4–0 |
| 5. குரு K. சொட்டு மருந்து (கக்குவானுக்கு) | 2– 0–0 | 6. குரு ஜீமாகளிம்பு(கரப்பானுக்கு) | 1– 0–0 |
| | | 7. குரு பாலர் டானிக் | 2–0–0 |

விபரங்களுக்கு:— (வி. பி. பி. பிரத்தியேகம்)

டாக்டர் எ. மதுரம் சன்ஸ், குரு மருந்து சாலை......
திருச்சிராப்பள்ளி (S. I.)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திருமணங்கள்

மண்டலமாணிக்கம், தோழர் பிச்சுமணியா பிள்ளை இல்லத்தில் 12-9-45 இரவு தோழர் சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் தோழர்கள் வெள்ளைச்சாமி-பரிபூரணம் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர் எம். எஸ். ராமசாமி பேசிய பின் வாழ்த்திதழ்கள் பல வாசிக்கப்பட்டன. மணமகன் நன்றி கூறினார். இச்சமூகத்தில் இதுவே முதல் சீர்திருத்தத் திருமணமாகும்.

o o

யாழ்ப்பாணம் தோழர் எஸ். எம். இராஜேந்திரம் அவர்கள் சகோதரி தோழர் நல்லம்மாவிற்கும், தோழர் கே. கே. தம்பிமுத்து அவர்களுக்கும் தோழர் என். ஆர். ஜேக்கப் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் இராஜேந்திரம், எம். பொன்னுதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் மணமக்கள் சார்பாக "குடி அரசு" "திராவிட நாடு" இதழ்களுக்கு முறையே ரூ. 2 வழங்கப்பட்டது.

o o

தூத்துக்குடி, சண்முகபுரம் தோழர் தவமணி நாடார் அவர்கள் முதல் மகன் தோழர் டேவிட், தோழர் பிரமைய நாடார் மகள் தோழர் ரத்தினமணி ஆகிய இருவருக்கும் தோழர் எஸ். சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்த விழாவில் தோழர்கள் ச. ராமசாமி நாடார், ரா. அருணாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

அருப்புக்கோட்டை தோழர் சிவசுப்பிரமணிய முதலியார் இல்லத்தில் 9-9-45 காலை தோழர் சொ. கந்தசாமி தலைமையில் தோழர்கள் பு. ராமானுஜமும், கு. இராமலட்சுமியும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர். தோழர்கள் சி. பி. சின்னராசு எஸ். எஸ். பழனிச்சாமி எம். சி. எம். நடராசன், எம். எஸ். ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

நாகூர் தோழர் என். சி. தம்புசாமிப் பிள்ளை மகன் தோழர் சுப்பிரமணியனுக்கும், திருமலைராயன் பட்டிணம் தோழர் ஏ. குப்புசாமி பிள்ளை மகள் தோழர் தனக்கோடி அம்மையாருக்கும் 2-9-45 காலை காந்தை தோழர் பி. ஆர். மீனாட்சி சுந்தரம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடந்தது. தோழர்கள் கோ. சி. பெரியசாமிப் புலவர், எஸ். கே. சாமி, சூரியமூர்த்தி ஆகியோர் சொற்பெருக்காற்றினர். 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

o o

சிதம்பரம் தாலூகா, புலியங்குடி தோழர் இரங்கசாமி அவர்கள் மகன் தோழர் தங்கராசு, பூந்தோட்டம் தோழர் இரத்தினசாமி அவர்கள் மகள் தோழர் சூடாமணி ஆகியோர், புவனகிரி தோழர் சிங்காரவேலடிகள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர். தோழர்கள் காசிநாதன், கோவிந்தசாமி, கணபதி, வரதன் முதலியோர் சொற்பொழிவாற்றினர். 'குடி அரசு', 'திராவிடநாடு' இதழ்களுக்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடை அனுப்பப்பட்டது.

o o

காரைக்கால், மேடு, தோழர் சி. அப்பாராசுக்கும், சென்னை தோழர் அசலாம்பிகை அம்மைக்கும் 9-9-45 காலை தோழர் என். ஜீவரத்தினம் தலைமையில் தோழர் கா. மு. இராஜரத்தினம் அவர்களால் தன்னுணர்வு மணம் நடத்தி வைக்கப்பட்டது. தோழர்கள் என். என். நாதன், காரை-சிவம், ப. நடேசன் முதலியோர் சொற்பெருக்காற்றியபின் மணமக்களுக்குப்பல வாழ்த்திதழ்கள், பரிசுகள், பகுத்தறிவு வெளியீடுகள் வழங்கப்பட்டன. 'குடி அரசு' வளர்ச்சிக்கு இரண்டு ரூபாய் அளிக்கப்பட்டது.

o o

திருப்பத்தூர் தோழர்கள் வே. ரா. பூங்காவனம்—வெற்றிச்செல்வி புரோகிதம் ஒழிந்த திருமணம், தமிழாசிரியர் தோழர் முருகைய முதலியாரின் தலைமையில் 18-9-45 அன்று நடைபெற்றதன் நினைவாகக் "குடிஅரசு" "திராவிட நாடு" இதழ்களுக்குத் தலா ரூ. 1 நன்கொடை அனுப்பப்பட்டது.

o o

கும்பகோணத்தில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் 16-9-45 பகல் 11 மணிக்கு நாககுடி தோழர் சாமிநாதனுக்கும், வெள்ளமண்டபம் தோழர் பக்கிரி அம்மாளுக்கும் நடந்த சீர்திருத்தத் திருமண நினைவாக "குடி அரசு", "திராவிட நாடு", டாக்டர் நாயர் வாசகசாலை ஆகியவைகட்கு ரூ. 1 வீதம் நன்கொடை தரப்பட்டது.

o o

ஆரணி கொசப்பாளையம் சூபர்வைசர் தோழர் சுப்ரமணியம் அவர்கள் மகள் தோழர் சந்திராவுக்கும், தோழர் சுப்பிரமணியனுக்கும் ஆரணியில் 13-9-45-ல் தமிழாசிரியர் தோழர் ஞானசம்பந்தம் தலைமையில் திருமணம் நடைபெற்றது. அதை ஒட்டி நடந்த பாராட்டுக் கூட்டத்தில் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. அன்பழகன், டி. வி. நாராயணசாமி, என். வி. நடராசன், சி. வி. எம். அண்ணாமலை மற்றும் பலர் பேசினர். 'குடி அரசு'க்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

வாணியம்பாடி புது டவுனில்அண்ணாமலை இல்லத்தில் 16-9-45-ல்தோழர்கள் வெங்கடேச முதலியாருக்கும், சக்குபாய் அம்மையாருக்கும், தோழர் சி. கோவிந்தராசன் முன்னிலையில் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்று 'குடி அரசு'க்கு 2 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

லால்குடி வட்டம் எதுமலை கிராமத்தில் 12-10-45ல் தோழர்கள் இராமலிங்கம்—ராஜலட்சுமி திருமணம் தோழர் நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. திருமண நினைவாக குடி அரசு, திராவிடநாட்டிற்கு முறையே 2ரூபாயும், தமிழ் உலகத்திற்கு 1 ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது. வீர. இளங்கோ, வாழ்த்துப்பத்திரம் அளித்தார்.

---

## மதிப்புரை

### இன எழுச்சிப்பாக்கள்!

இயற்றியவர்:- திருவத்திபுரம்
மாவண்ணா தேவராசன்.

வெளியிடுவோர்:- இலட்சுமி நூல்
பதிப்பகம், திருவத்திபுரம். வ. ஆ.

சினிமா மெட்டுக்களில் சீர்திருத்தம் வழியும் சிறந்த பாட்டுக்கள் பல செறிந்து கிடக்கின்றன! கடவுள், மதம் இவற்றிற்கு ஒரு நல்ல சவுக்கு!

விலை மூன்றணா!

## சேலத்தில் ரத்னா பிலிம்ஸ்!

சேலம் தோழர் ரத்தினசாமி பிள்ளை அவர்கள் தமது நண்பர்களோடு சேர்ந்து "ரத்னா பிலிம்ஸ்" என்ற புதிய சினிமா படப்பிடிப்பு நிலையத்தை 10-10-45 காலையில் துவக்கியுள்ளார். "யோகி வேமன்னா"வின் வாழ்க்கைச் சித்திரத்தை முதல் தமிழ்ப் படமாக வெளியிடத் தீர்மானித்துள்ளார்கள்.

## அறிவிப்பு

13-10-45-ந் தேதி முதல் "குடிஅரசு" பத்திரிகை விற்பனை செய்ய கொழும்புக்கு சோல் ஏஜண்டாக "குடி அரசு ஸ்டோர்" என்ற விலாசதாரரை நியமித்துள்ளோம். பத்திரிகை அவர்களிடம் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:-
'குடி அரசு' ஸ்டோர்,
130. மொகாந்திரம் ரோடு,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு.

மானேஜர்.

## மறைவு

மதுரை சுயமரியாதை, திராவிடர் கழகங்களில் பங்கெடுத்து உழைத்தவரும், தீவிர வாதியுமான தோழர் வைத்தியபதி எம். எஸ். சுப்ரமணியம் 5-10-45-ல் தமது 48-வது வயதில் அகால மரணமடைந்தார். இடுகாட்டில் டாக்டர் வி. எஸ். சண்முகானந்தம் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுக்கொடுங்கள் என்று எவரையும் பல்லைக்காட்டிக் கெஞ்சவுமில்லை.

சுயமரியாதை இயக்கம் இதுவரையிலும் செய்துள்ள காரியங்களில் சிலவற்றை இங்கே கூற விரும்புகிறேன். சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக அயலார் சூழ்ச்சியினால் அடிமைத் தளை பூண்டு, மூட வழக்கங்களில் கட்டுப்பட்டு, பகுத்தறிவையும் தன்மானத்தையும் இழந்து, நெடுந்துயிலில் ஆழ்ந்திருந்த மக்களைக் கண்விழிக்கச் செய்தது என்றால் சுயமரியாதை இயக்கத்தின் சிறப்புக்கும், அதன் தந்தையாகிய பெரியார் அவர்களின் பெருமைக்கும் வேறு சான்று வேண்டுமோ? குறுகிய காலத்தில் இத்தனை வெற்றிபெற்ற இயக்கமும் இல்லை; இயக்கத் தலைவரும் இல்லை என்பதே உண்மை. நிற்க,

வருணாச்சிரமத் தருமத்தை இதுவரை ஆதரித்தும் பாராட்டியும் வந்த தோழர் காந்தியார் இப்போது கூறுவதைக் கேளுங்கள். "ஜாதி என்பது மதநூல் எதிலும் கூறப்படவில்லை. எல்லாரும் ஒரே குலம். ஜாதி வேற்றுமை மதத்துக்கு முரண்பட்டது. பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் எதுவும் மதநூலாகாது" என்று இப்போது கூறுகிறார். ஜாதி வேற்றுமையைக் கூறும் மநுஸ்மிருதியை இங்ஙனம் மறைமுகமாகக் கண்டிக்கும் அறிவும் நெஞ்சழுத்தமும் காந்தியாருக்கு எங்ஙனம் வந்தது, யாரால் வந்தது? அன்பர்களே எண்ணிப் பாருங்கள். பெரியார் அவர்களின் இடைவிடா உழைப்பும் அணுக்குண்டுக்கும் அஞ்சாத அவரது வீரமும் அல்லவா காந்தியாரையே சுயமரியாதைக்காராகச் செய்துவிட்டது. வடநாட்டிலிருந்து சென்னைக்கு ஒரு கார் வந்தது. அது வேதம், கீதை, மநுஸ்மிருதி முதலிய நூல்களை வெளிப்படையாகக் கண்டித்தது. ஒரு கூட்டம் அந்தக் காரைப் பார்த்துக்கொண்டே துரத்திச் சென்றது. காரோ அதைப் பொருட்படுத்தவில்லை. வெற்றிகரமாக வினையாற்றித் திரும்பிச் சென்றது. தோல்வியுற்ற கூட்டம் ஒப்பாரி வைத்துப் பின்னர் ஓய்வடைந்தது. அந்தக் கார் எது தெரியுமா? அதுதான் அம்பேத்கார்! இவரைத் தூற்றிய கூட்டம் இப்போது ஏன் மௌனம் சாதிக்கிறது என்பதே எனது கேள்வி.

சர். ஏ. இராமசாமி முதலியார் நீதிக் கட்சியின் தூண் போன்றவர். கடவுள் பக்தியும், அமைதியும், உலக அறிவும், பரந்த நோக்கமும் வாய்ந்தவர். உயர்ந்த பதவியில் இருப்பவர்; இதனினும் உயர்ந்த பதவிக்கு விரைவில் செல்லக் கூடியவர். இவரது திரு மகனார் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமிக்கு சமீபத்தில் புரோகிதமின்றித் திருமணம் நடந்ததை நீங்கள் அறிவீர்கள். அத்தகைய உயர்ந்த குடும்பங்களிலும் சீர்திருத்தத் திருமணங்கள் இப்போது சர்வ சாதாரணமாக நடக்கின்றன என்றால் நமது இயக்க வெற்றிக்கு வேறு சான்றும் வேண்டுமா?

சில வாரங்களாக தோழர் சக்கரவர்த்தி இராஜகோபால ஆச்சாரியார் ஜாதி வேற்றுமை இந்நாட்டில் ஒழியவேண்டும்; அதுவே இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது; இளைஞர்கள் கலப்பு மணமே செய்து கொள்ளவேண்டும். அதனால் ஜாதி வேற்றுமை ஒழியும், நுண்ணறிவும் உடல் வன்மையும் உடைய மக்களையும் பெறலாம் எனப் பேசியும் எழுதியும் வருகிறார். இந்தச் சீர்திருத்த பத்தி இவருக்கு எங்கிருந்து வந்தது? யார் தந்தது? எனக் கேட்கிறேன். சுயமரியாதை உபதேசம் கேளாக் காதையும் கேட்கச் செய்ததெனின் இதைக்காட்டிலும் வெற்றி வேறென்ன வேண்டும்!

கட்டாய இந்தியைப் புறங்காட்டச் செய்து, மக்களுக்குத் தாய் மொழிப் பற்றையும், தன்மான உணர்ச்சியையும் ஊட்டித் தமிழிசை இயக்கத்தைத் தோன்றச் செய்தது யார்? எது? என்ற வினாக்களுக்கு விடை அறியாதார் உண்டோ?

நமக்கிருந்த சூத்திரப்பட்டம் எங்கே? நம்மை இழிவுப்படுத்தும் பொருட்டுப் புகைவண்டி நிலையங்களின் உண்டிச் சாலைகளில் தொங்கவைத்திருந்த பலகைகள் எங்கே? இவையெலாம் மாயமாய் மறைந்து போனது யாரால்? எதனால்? தோழர்களே சிந்தித்துப் பாருங்கள்!

சமீபகாலத்தில் நமது இயக்கத்தில் பிளவு ஏற்பட்டிருப்பது பெரிதும் வருந்தத் தக்கதேயாம். ஆனால், இப்பிளவு ஒரு குடும்பத்தில் தந்தைக்கும் பிள்ளைகளுக்கும் சிறு பிளவு போன்றது. இரு திறத்தார்க்கும் இலட்சியத்தில் முரண்பாடில்லை; சுயமரியாதை வண்டியினின்றும் சில பேர் இறங்கி நடக்கின்றார்கள். வண்டி விரைவாய்ப் போக ஆரம்பித்தால் இறங்கிப் போனவர்கள் வந்து சேர்ந்துகொள்வது திண்ணம்; எல்லாக் கட்சிகளிலும் இத்தகைய பிளவுகள் உண்டாவது இயல்பு. இதில் யாதொரு மலைப்போ அல்லது வியப்போ இருக்கக் காரணம் இல்லை. இந்தப் பிளவினைக் கண்டு எதிரிகளும் ஏளனம் செய்ய முடியாது. கண்ணாடி வீட்டில் குடியிருப்போர் பிறர்மீது கல்லெறியத் துணிய மாட்டார் அல்லவா?

சுயமரியாதை இயக்கம் இனிச்செய்ய வேண்டிய பணிகளும் பல உள. அவற்றுள் சிலவற்றைச் சொல்ல விழைகின்றேன். ஆலயங்கள் எல்லோர்க்கும் பொதுவாகத் திறக்கப்படவேண்டும். கோயில்களில் ஜாதிக்கொரு இடம் வகுக்குங்கொடுமை ஒழியவேண்டும். எக்குலத்தவனும் கோயிலுக்குள் நேரே சென்று உருவத்தைக் கண்டோ அல்லது தொட்டோ வணங்கும் வழக்கம் அமுலுக்கு வரவேண்டும். கடவுள் நமக்கெல்லோருக்கும் தந்தை; அவர் முன்பு நாம் எல்லோரும் சமம் என்று பேச்சளவில் கூறிச் செயலளவில் பிராமணருக்கு முன்னிடம் தந்து, பிராமணர் அல்லாதாருக்குப் பின்னிடம் கொடுத்து, ஆதித்திராவிடருக்கு அதையும் மறுத்துவரும் இந்நாட்டு வழக்கம் விரைவில் ஒழிய வேண்டும். தமிழ்நாட்டுக் கோயில்களில் கடவுள் வணக்கம் தமிழில் நடத்தப்பட வேண்டும். தமிழ் பற்றுடைய பண்டிதரும் பாமரரும் இதில் பங்குகொள்வாராக.

ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், ஆறுகள், குளங்கள், சத்திரங்கள் முதலிய பொது நிலையங்களில் ஜாதி வேற்றுமையை நினைப்பூட்டும் பாகுபாடுகளோ அல்லது ஜாதிப் பூசல்களை வளர்க்கும் தனியுரிமைகளோ சட்டப்பூர்வமாய் நீக்கப்படவேண்டும். இந்தத் துறையில் கிளர்ச்சிகள் செய்தோ, சிறை சென்றோ வெற்றி பெறுவது நம்மனோர் கடனாகும். இதனை ஆடவர்களாகிய நீங்கள் முடிப்பீர்களென நம்புகிறோம். இல்லையேல் பெண்களாகிய நாங்கள் அதனை முட்டின்றி முடித்துக்காட்டி, கண்ணகி பிறந்தது தமிழ் நாடு, வீர மங்கையர் வாழ்ந்தது தமிழ் நாடு என்பதை நிரூபித்துக் காட்டுவோம் எனக் கூறுகிறேன்.

பெண்களுக்குத் தகப்பன் சொத்தில் சம உரிமை உண்டென்று சட்டம் செய்தல் வேண்டும். ஜனத்தொகுதியில் பாதி எண்ணிக்கை உள்ள பெண் இனத்துக்கு ஒரு உரிமையும் வழங்காமல் அவர்களைப் பேதையர் என்றும், மடவார் என்றும், பாவையர் எனவும் கூறி அடிமைகளாக நடத்திவந்தால் இந்த நாடு முன்னேறுமா எனக் கேட்கிறேன். சம உரிமையும், சம வாய்ப்பும் பெண்களுக்கு வழங்குவது எந்நாளோ அந்நாளே இந்நாட்டின் பொன்னாளாகும் என்பது எனது கருத்து.

வருங்காலத்தில், அரியசேவைகள் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. தியாகம் செய்யத் தயாராய் இருங்கள். சுயநலம் பேணற்கு இது காலமல்ல. ஏழைகளே நமது தோழர்கள்; பாட்டாளிகளே நமக்குக் கூட்டாளிகள். தாழ்த்தப்பட்டோரே நமது சகோதரர்கள்; இவர்களுக்குத் தொண்டாற்றுதலே நமக்குப் பேரானந்தம். அந்த ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்து ஆறாக ஓடப் போகிறது. அதில் சோ வாரும் ஜெகத்தீரோ என்று உங்களை நான் வரவேற்று மகிழ்ச்சியுடன் கொடியேற்றுகிறேன்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.